


வாழ்க்கையின் எல்லாக் கட்டத்திலும் சாதி வேண்டும். இட ஒதுக்கீட்டிற்கு மட்டும் வேண்டாமாம்! சாதி ஒழிக்கப்படும் வரை, சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடும் இருப்பதே நியாயம்

FREE E - BOOKS , www.thamizham.net.,



# கழிவறை ஆடம்பரங்கள்

கழிவறைகளே இல்லாமல் பொது விடங்களை அசுத்தப் படுத்திக் கொண்டு ஒருபக்கம் மக்கள் வாழும் இந்தியாவில் கழிவறையா அல்லது கனவுலகமா என வியக்கும் வண்ணம் கழிவறைகள் கட்டப்பட்டு வருகின்றன, இவை பொதுமக்களுக் கல்ல; இந்தியப் பணக்காரர்களுக்கு.

பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கும் பண முதலைகள் இப்போது கழிவறையை நவீனமயமாக்குவதில் இறங்கி யிருக்கிறார்கள் வெளிநாட்டுத் தொழில் நுட்பங் களை இறக்குமதி செய்து கொள்ள முன்னாள் பிர தமர் ராஜீவ் காந்தி அனுமதி அளித்ததிலிருந்துதான் இப்புரட்சி தோன்றியுள்ளது கழிவறைகளில் எப்ப படிப் புரட்சி செய்வது என்பதற்கு ஹாலிவுட் மற் றும் பம்பாய் திரைப்படங்கள் தூண்டுகோலாக விளங்கி வருகின்றன.

இப்புரட்சிகளின் சில - பம்பாய் தொழிலதிபர் ஒருவரது இல்லத்தின் கழிப்பறை வட்டவடிவமா னது. இதில் ஒரு பாதி அரபிக்கடல் மீது தொங்குவது போல காட்சியளிக்கிறது மறுபாதியில் மலைக்குகை களும், நீருற்றுகளும் நீர்வீழ்ச்சிகளும் அமைக்கப் பட்டுள்ளன. டெல்லி வியாபாரி ஒருவருக்குக் கழி வறைக்குச் செல்வதானால் கிரேக்க அரங்கிற்குச் செல்வது போல இருக்க வேண்டுமாம் அதனால் கிரேக்க கட்டிடக்கலை முறையில் சலவைக்கல்லில் தூண்களும், வளைவுகளும் வைத்து கழிவறை கட் டியுள்ளார். மற்றொரு வியாபாரி தமது கழிவறை சுவரில் ஒரு நயாகரா நீர்வீழ்ச்சியே அமைத்திருக் கிறார்.


நாற்றம் பிடித்த பொதுக்கழிவறையை வெளி நாடுகளைப் போலத் தானியங்கிச் சாதனங்களை அமைத்து எப்போதும் தூய்மையாக வைத்திருப்பது ஒன்றும் அசாத்தியமில்லை! சாத்தியமாக்கும் சிந் தனைவருவதுதான் அசாத்தியம்!

—நிலா

---

❀ தேவைப்படும் நேரத்தில் தன் வாலைச் சிமுற்றி எறியும் உயிரினம் பல்லி

FREE E - BOOKS , www.thamizham.net.,



# வாசகர் எதிரொலி

❀ தூசி தட்டி வாசித்தவை- என்ற பகுதியில் வந்த சுருக்கப்பட்ட பெரியாரின் நூல் விமர்சனத்தைப் படித்துப் பார்த்த போது ஒரு கோணத்தில் அது சரி போலவும் மறு கோணத்தில் அது வியப்பையும் ஏற்படுத்தியது 1936 ல் பெரியார் எழுதியதுபோல் தான் இப்பொழுதும் சில கிராமங்கள் இருக்கின்றன. என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டி இருக்கிறது. முதுகெலும்பு முறிந்து கிடக்கும் கிராமங்களைச் சரி செய்ய வேண்டுமே தவிர கிராமங்களைக்காலி செய்யச் சொல்வது சரியான தீர்வாகாது.

— எஸ். வி. ராஜசேகர், சேப்பாக்கம், சென்னை-5

❀ 'நாமே தோட்டிகள் ஆவோம்' கட்டுரை என்னைத் தலை குனிய வைத்தது. பரிதாபத்துக்குரிய அந்த இனம் பல நூற்றாண்டுகளாக மீண்டு எழ முடியாத அளவுக்கு நசுக்கப்பட்டுள்ளது. சுயமரியாதையைப் பற்றியும், இன உணர்வு பற்றியும் வாய்கிழியப் பேசுபவர்கள் கூட இந்த இனத்தின் பரிதாபத்துக்குரிய நிலையை ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. பொது உடமை பேசும் சிவப்புத் தோழர்களும் அந்த இனத்தைப் பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. மதம் மாற்றும் மிஷினரிகளும் அந்த அப்பாவிகளிடம் நெருங்கவில்லை.

— K. P. மோகன், கிருஷ்ணாபுரம்

❀ தொண்டர்களுக்குத் 'தரிசனம்' தருவதற்குக் கூட தயங்குகின்ற ஜெயலலிதாவின் அரசியல் செல்வாக்கு - நமது கேவலமான தலைவிதிகளில் முதன்மையானது. என்று மாறும் இந்த அவலம்?

— எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

❀ நேர்முகத் தேர்வு கவிதை அருமை. விலைமகள் புளித்துப் போன பழையகள்- சொல்லும் விதம்தான்.

— வலம்புரி லேனா, குளித்தலை

❀ டாக்டர் சி டி. கே. சாரி. பேசுகிறார் போன்ற பகுதிகள் சுட்டிக்குத் தேவையற்ற ஒன்று. அறிவியல் உலகில் வாழும் நாம் சோதனைக்கு உட்பட மறுக்கும் எந்த விஷயத்தையும் மற்றவர்களின் அந்த கருத்துக்களின் அடிப்படையில் ஏற்க வேண்டியதில்லை.

— S. கருப்பையா, அறந்தாங்கி

---

**❀ தந்தையின் 4-வது மனைவிக்குப் பிறந்தவர் காந்தி. 6-வது மனைவிக்குப் பிறந்தவர் வள்ளலார்**

FREE E - BOOKS , www.thamizham.net.,



# எமக்கு வந்தவை

மண்ணுக்கேற்ற பொதுவுடைமை (10·00) சமுதாயச் சிக்கல்கள் குறித்த கட்டுரைகள் கரூர். பி. ஆர். குப்புசாமி; வெளியீடு:
மகரந்தம், 19, மேற்கு மடவளாகம் தெரு, கரூர்-639001

திராவிட ஆப்பிரிக்க ஒப்பீடு: (25-00) ஆப்பிரிக்க சென்கால் நாட்டிற்குச் சென்று நேரடியாக ஆய்ந்த செய்திகள். டாக்டர் தாயம்மாள் அறவாணன், வெளியீடு: தமிழ்க் கோட்டம், 15, முனிரத்தினம் தெரு, அய்யாவு காலனி, சென்னை-600 029

உயிரில் நடந்த உற்சவங்கள் (4-00) எழுதுகோலால் எண்ணக்கண் திறக்கும் கவிதைகள் கவிஞர்-சுகன் கிடைக்குமிடம்: சுகன் பைந்தமிழ்த்தடாகம97, கீழத் தெரு, கணபதி நகர், தஞ்சாவூர் - 613001
கள்ளும் மொந்தையும் (5-00) அகவல் ஓசையில். அமைந்த புதுப் பாடல்கள்

வேப்பங்கனிகள் (5-00) வன்மைமிக்க உணர்ச்சிகளும் கூர்மையான தாக்குதல்களும் உள்ளீடாக அமைந்த கவிதைகள்- மேற்கண்ட இரு நூல்களின் ஆசிரியர் தங்கப்பா. கிடைக்குமிடம் வானைப் பதிப்பகம், 35, அவ்வைநகர்' புதுவை- 605 008

சட்டங்கள் நமக்காக நம்மைக்காக்க (விலையில்லை) இத்தொடரில் 15 வது வெளியீடு: இரண்டாவது திருமணம்- சட்ட விளக்கங்கள் 16 வது வெளியீடு: காவல்துறை- சில விளக்கங்கள் கிடைக்குமிடம்: சட்டக்கல்வி மற்றும் நிதி நிறுவனம், 15, இராமலிங்க நகர், பழைய மகாபலிபுரம் சாலை, கொட்டிவாக்கம், சென்னை- 600 041

சென்ற இதழில் திருத்தம் ஜனவரி 90 இதழின் நடுப்பக்கத்தில் அமைந்த "கருணாநிதியின் ஆங்கில மோகம்" என்ற கட்டுரையின் நடுப் பகுதியில் அமைந்த தடித்த எழுத்துக்களில் அமைந்த செய்தி தவறாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றிப் படிக்கவும் :-

"அவர் (தேவிலால்) இங்கு வந்து தமிழர்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில், தமிழ் உணர்வுக்கு மதிப்பு அளித்து ஆங்கிலத்தில் பேசினார். அவருக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

FREE E - BOOKS , www.thamizham.net.,




# கொசுவிரட்டிகள் பாதுகாப்பானவையா!

உடல் நலனுக்கு எந்தத் தீங்கும் செய்வதில்லை என்று விளம்பரப் படுத்தப்படும் கொசுவத்திகள், களிம்புகள், வில்லைகள் எந்த அளவுக்கு நம்பகமானவை? கொசுவத்தி எரியும்போது கார்பன் மோனாக்ஸைட் என்னும் விஷ வாயுவும், சிகரெட் புகையில் இருப்பதைவிட மிகுதியாக உள்ள "தார் நைட்ரோ"வும் நிச்சயம் தீங்கானவை. களிம்பில் உள்ள பூச்சிக் கொல்லியான டையத்தில் பினைல்ஃபார்மமைடு கண்களுக்கு எரிச்சல் மூட்டவும், சளிச்சவ்வுகளைத் தாக்கவும், நரம்பு மண்டலத்தை முடக்கவும் வாய்ப்பு உள்ளது. கொசுவில்லை சூடாகி இளகும்போது ஏற்படும் நச்சுவாயு மனிதனுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடும். கொசு வலை மட்டுமே பாதுகாப்பானது.

—புதுவை ஒற்றன்

---

❁ இந்தியாவில் ரூ 40,000கோடி மதிப்புள்ள கறுப்புப்பணம் புழக்கத்தில் உள்ளதாக மதிப்பிடப்படுகிறது.

---

❁ ஒரு மனிதனால் 6 வாரங்கள் உணவில்லாமல் உயிர் வாழ முடியும்

இதுபோன்றே கடந்த டிசம்பர் 28 அன்று பம்பாய்-சென்னை விமானம் புறப்பட 15 மணி நேரத்திற்கும் மேற்பட்ட தாமதம், இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தாரின் மெத்தனப்போக்கு இவற்றால் குமுறிய பயணிகள் சென்னை நுகர்வோர் செயற்குழுவின் உதவியுடன் விமான நிலையத்திலேயே விமானப் பயணிகள் சங்கத்தை உருவாக்கினர், தாமதம், நிறுவனத்தினரின் அலட்சியப் போக்கு இவற்றால் ஒவ்வொரு பயணிக்கும் ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு ஈடாக இந்தியன் ஏர் லைன்ஸ் ரூ 10 லட்சம் கொடுக்க வேண்டும் என்று இவர்கள் வற்புறுத்தி வருகின்றனர்.

—ரேவதி

---

## நண்பர்க்குப் பரிசாக சுட்டி

பிறந்த நாள், திருமணம் போன்ற விழாக்களுக்குப் பயனுள்ள பரிசு என்ன தருவது என்று குழம்புகிறீர்களா? பரிசுக்குரிய பொருள் சுட்டி இருக்கக் கவலை ஏன்? பரிசுக்குரியவரின் பெயர், முகவரி, விழா விவரம் குறிப்பிட்டு, சுட்டிக்கு 12 பணவிடை (ரூ. 0) செய்யுங்கள், அவருக்கு உங்கள் பரிசாக ஓராண்டு சுட்டியை அனுப்புவதோடு, உங்கள் சார்பாக வாழ்த்தையும் அனுப்பிவைக்கிறோம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



# வருமான வரி ஓரவஞ்சனை

ஏற்கனவே பற்றாக் குறையில் இருந்து வரும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த தொழிலாளர்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள் போன்றோரிடம் விடாப்பிடியாக வருமான வரி பிடுங்கப்படுகிறது. அவர்கள் வாங்கும் சம்பளத்தில் வருமானவரியைச் சல்லிசாக வெட்டி விட்டே, பாக்கியைத் தருகிறார்கள். இந்த நாட்டில் ஒழுங்காக வரி கட்டுகிறவர்கள் இந்த நடுத்தர வகுப்புச் சம்பளக்காரர்கள் தாம்.

நடுத்தர வகுப்பினரை விட மிகக்குறைவாகவே பல வியாபாரிகளும், தொழிலதிபர்களும் வருமான வரி கட்டுகிறார்களே அது எப்படி?

30 கோடி ரூபாய் செலவு செய்து பம்பாயில் திருமணம் நடத்திய வைர வியாபாரியிடம் அரசு எவ்வளவு வருமான வரி வாங்க முடிந்தது? முன்னாள் முதல்வரும், நடிகருமான என். டி. ராமராவிடம் ஏன் நீங்கள் வருமான வரி கட்டுவதில்லை 'என்று கேட்டால்,' நான் துறவி எனக்கு வருமானமே கிடையாது; என்று மனசாட்சியை மழுங்கடித்து விட்டு புளுகுகிறார். இவரை வருமான வரித்துறை என்ன செய்யப் போகிறது?

வடநாட்டு நடிகர் அமிதாபச்சன் ஒரு படத்தில் நடிப்பதற்கு ரூ 1கோடியும், இங்குள்ள ரஜினிகாந்த் ஒரு படத்திற்கு ரூ 50 லட்சமும் வாங்குகிறார் என்ற தகவல் சின்ன சிசுவுக்குக் கூட எட்டியிருக்கிறது பாவம் வருமானவரித் துறையினருக்கு மட்டும் தெரியாது! சில லட்சங்களை மட்டும் கணக்குக் காண்பித்து, பல லட்சங்களை உலகெங்கும் முடக்கி வைத்திருக்கும் இவர்களை இந்தத் துறை கண்டு கொள்ளாமல், ஏமாந்து போகத் தயாராக உள்ளது.

பகிரங்கமாக சம்பளத்தைப் பெற்று, எத்தனையோ பிடித்தங்களுக்குப் பின் நிற்கும் தொகையில் வருமானவரியை கட்ட வேண்டிய நிலையில் இருக்கும் நடுத்தர வகுப்பினரிடம் மட்டும் தான் இவர்களின் ஜம்பம் பலிக்கிறது!

உன்னை விட்டேனா பார் என்ற முறையில் சம்பளக்காரர்களிடம் பிழிந்து வசூலிக்கும் வருமான வரி தேசிய வருவாயில் 2% மட்டுமே இவர்களிடமிருந்து வருமானவரியை முழுவதுமாக ரத்து செய்தால் நாட்டுக்கு ஒன்றும் பெரிய இழப்பு வந்து விடாது. ரத்து செய்வதால் கோடிக்கணக்கான நடுத்தர வகுப்பினர் நிம்மதிப் பெருமூச்சு விடுவர். இந்தப் புண்ணியத்தைத் தற்போதைய அரசு கட்டிக் கொள்ளுமா?

—அஞ்ஞானி

---

❀ இருமுறை நோபல் பரிசு பெற்ற மேரி கியூரி இளமையில் வீடுகளில் வேலை செய்து பிழைத்தவர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிறுவர்களின் எலும்புக்கூடு விற்பனை!

ஆஸ்திரேலியாவும், சில மேலை நாடுகளும், மருத்துவக் கல்விக்காகவும், ஆராய்ச்சிக்காகவும் மனித எலும்புக்கூடுகளை விலை கொடுத்து வாங்கக் காத்திருக்கின்றன.

ஒரு மாதத்திற்கு 1500 இந்தியக் குழந்தைகள் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டு, அந்தச் சின்ன எலும்புக்கூடுகள் ஏற்றுமதியாகின்றன.

அண்மையில் பீகாரில் ஏற்பட்ட பஞ்சத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, இக்கிராமங்களில் புகுந்து சிறுவர்களைக் கடத்தியும், விலைக்கு வாங்கிக் கொண்டும் போயிருக்கிறார்கள் கொலைகாரர்கள். பஞ்சத்தினால் அணு அணுவாகப் பிள்ளைகள் செத்து மடிவதைக்காணச் சகியாத பெற்றோர்கள், இடைத்தரகர்கள் காட்டும் ஆசையில் மயங்கித் தங்கள் பிள்ளைகளாவது நன்றாக இருக்கட்டும் என்று விற்றிருக்கிறார்கள்

பெற்றோர்களிடமிருந்து பறிக்கப்பட்ட இக்குழந்தைகளை மனித வாசனையே இல்லாத கங்கைக் கரையோரம் அழைத்துச் செல்கின்றனர். அங்கே ஆடு மாடுகளை இறைச்சிக்கடையில் வெட்டித் தள்ளுவதுபோல அக்குழந்தைகளைக் கூறாக்குகின்றனர்.

அந்த இரக்கமற்ற கொலைகாரர்கள் வெட்டப்பட்ட குழந்தைகளின் தோலை அப்படியே உரித்து கங்கையில் வீசி விடுகின்றனர், உரிக்கப்பட்ட தலைகளையும், உடல் பாகங்களையும் தனித்தனியாக, எடுத்து, பெட்டிகளில் அடுக்கி, பத்திரமாக கல்கத்தாவுக்கும் பாட்னாவிற்கும் ஓசைப்படாமல் அனுப்புவர்.

அங்கே பூமிக்கடியில் இயங்கும் ஒரு தொழிற்சாலையில் எலும்புக் கூடுகள் சுத்தப்படுத்தப்பட்டு, கப்பல் மூலமாக உலகெங்கும் செல்லத் தயாராகின்றன.

ஆஸ்திரேலியாவில் ஒரு சிறு எலும்புக்கூட்டின் விலை 331டாலர்கள்; பெரியவர்களது 33 டாலர்கள்.

பிளாஸ்டிக் எலும்புக் கூடுகளைப் பயன்படுத்தலாம் என்று வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தும், மலிவாக மனித எலும்புக் கூடுகளை வாங்கிப் பயன்படுத்தும் காட்டுமிராண்டித்தனம் நிற்கவில்லை!

—தொகுப்பு : சாலி

---

❀ 34,433 நாட்கள் வாழ்ந்த பெரியார், 8200 நாட்கள் மக்களைச் சந்திப்பதில் செலவிட்டிருக்கிறார்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கருக்கலைப்பால் ஊனமுறும் குழந்தைகள் !

நமது இந்திய அரசாங்கம் கவர்ச்சியான விளம்பரங்கள் மூலம் கருத்தடை மாத்திரைகளை நம்மீது திணித்து வரும் அதே வேளையில், அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் நகரத்திலிருந்து வெளிவரும் "அனைத்து நாட்டு குடும்பக் கட்டுப் பாட்டுக் காட்சி" என்னும் வெளியீடு கருத்தடை மாத்திரைகளைப் பற்றி வெளியிட்டுள்ள ஒரு செய்தி நம்மை திடுக்கிடச் செய்கிறது.

இதன் படி கருத்தடை மாத்திரைகளை நான்கு ஆண்டுகளுக்கு மேல் பயன் படுத்தும் பெண்களுக்கு மார்புப்புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம். மேலும் இந்த ஆய்வறிக்கையின் கணிப்புச் சரியானதென்றால் மார்புப்புற்றுநோய் ஏற்படும் பெண்களில் 36வயதிற் குட்பட்டவர்களில் 20 விழுக்காட்டினர் கருத்தடை மாத்திரைகளைத் தொடர்ந்து பயன்படுத்தியதால் புற்றுநோய்க்கு ஆளாகினர் என்பதை ஏற்றுக்கொள்ளலாம் என்கிறது அந்த வெளியீடு

கருத்தடை மாத்திரைகளுக்கே இந்த நிலைமை என்றால், கருக்கலைப்பு மாத்திரைகளைப்பற்றிக் கூறவே வேண்டாம். இவற்றால் கட்டாயம் தாயின் உடலுக்குத் தீங்கு நேரும். சில தாய்மார்கள் கருக் கலைப்பிற்கு மாத்திரைகள் சாப்பிடுகிறார்கள். அப் படிச் சாப்பிட்டும் கரு கலைவதில்லை யென்றால், சரி பெற்றுத்தான் தொலைப்போமே என்று விட்டுவிடு கிறார்கள். இது எவ்வளவு பெரிய பிழை தெரியுமா? அப்படிக் கலையாமல் பிறக்கும் குழந்தைகள் ஊன முற்றவையாகவே பிறக்கும். பாவம் அந்தக் குழந்தை கள். எனவே தாய்மாரே, கலைப்பதானால் முழுவது மாகக் கலைத்துவிடுங்கள் மருத்துவரின் உதவியை நாடி. அன்றேல் குழந்தையை முழுதாகப் பெற்றெ டுங்கள்.

கருத்தடை மாத்திரைதான் என்றில்லை, கருவுற் றிருக்கும் போது, தேவையின்றி மருத்துவரிடம் கேட் காமல் தாங்களாகவே மற்றமருந்து, மாத்திரைகளை உண்பதைக் கூடத் தாய்மார்கள் தவிர்க்க வேண்டும் இதுவும் பிறக்கும் குழந்தையை ஊனமாக்கும் வாய்ப் புக்கள் அதிகம். மருந்து மாத்திரை சாப்பிட்டுதான் ஆக வேண்டுமென்ற நிலை இருக்குமானால், தகுந்த மருத்துவரிடம் கேட்டு, நீங்களே முயற்சி எடுத்து சாப்பிடும் மருந்தின் தீய பக்க விளைவுகளைப் பற்றி நன்கு அறிந்து கொண்டபின்பே சாப்பிடுங்கள்.

—புதுவை ஒற்றன்

---

திமிங்கலம் ஒரு நாளைக்கு உண்ணும் உணவின் எடை 3 டன்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சினிமா நடிகர் இதழ்கள்

தமிழ் "செக்ஸ் இதழ்கள்" கடைகளில் சூடாக விற்பது குறைந்து "பாக்கெட் நாவல்கள்" சூடு பிடிக்கத் தொடங்கின. இப்போது இதற்கும் மவுசு குறைந்து விட்டது

இப்போது விருவிருப்பாக விற்பவை சினிமா நடிகரைப் பற்றிய தனி இதழ்கள்! தனி மனித வழிபாடு தமிழகத்தின் மாறாத தலையெழுத்தா? மேலும் மேலும் இந்த அருவருப்பு பல வடிவங்களில் வளர்வது குமட்டி வருகிறது.

நடிகர் ரஜிகாந்தை மையமாக வைத்து 9 மாத இதழ்களும் (ரஜினி ரசிகன், எஸ்- நோ ரஜினி, டைகர் ரஜினி, ஸ்டைல் ரஜினி, திரைச்சிற்பி ரஜினி தேன் விழி ரஜினி, ...) கமலஹாசனைப் பற்றி 3 இதழ்களுகம், (கமல் ரசிகன், ஹலோ கமல், மய்யம்), விஜய காந்து இதழ் ஒன்றும் (அன்பு விஜயகாந்த்) நடத்தப்படுகின்றன.

பேசும் படம், சினிமா எக்ஸ்பிரஸ் போன்ற பழைய சினிமா" இதழ்களைப் பின்னுக்குத்தள்ளி இந்தத் தனிநபர் சினிமா இதழ்கள் ஆயிரக்கணக்கில், விற்கின்றன. "நாமர்க்கும் குடியல்லோம்" என்ற அறிவிப்பை மாட்டிக்கொண்டு, சமூகத்தைப் புரட்டி விடுவது போல ஆவேசப்படும் "நக்கீரன்" நிர்வாகம் தான், 'ரஜினி ரசிகனை" யும் வெளியிடுகிறது. (இரட்டை முகம் என்பது இன்று பத்திரிகை யுலக வணிகத் தந்திரம், தராசு பத்திரிகை நிர்வாகம் தான் "திரைச்சுவை' என்ற ஆபாச பத்திரிகையையும் வெட்கமின்றி நடத்தி வருகிறது. இவர்களின் சமூக அக்கறை என்பது மோசடியான முதலைக் கண்ணீர் தாம்)

இந்த "ரஜினி ரசிகன்," ரஜினியின் பிறந்த நாளைக் கொண்டாட ரூ 10/ விலைக்கு ஒரு சிறப்பிதழ் வெளியிட்டது. 30, 000 பிரதிகள் வெளியிட்ட இந்த இதழை ரஜினி ரசிகர்கள் கணப்பொழுதில் கொத்திக் கொண்டு போய்விட்டார்களாம். நக்கீரனுக்கு நல்ல வியாபாரம்; இதே மாதிரி 1988 செப்டம்பரில் தொடங்கப்பட்ட எஸ்- நோ- ரஜினி 24, 00 பிரதிகள் தங்கு தடையின்றி விற்பனையாகிறதாம். ரூ3/ க்கு விற்கும் இந்த இதழை ஈரோடு ரஜினி ரசிகர்கள் ரூ25/ க்கு கறுப்பில் முண்டியடித்து வாங்குகிறார்களாம். மாதா மாதம் இந்த மாதிரி இதழ்களை விலை ஏற்றிக் கொண்டே போனாலும் பணம் கொடுத்து வாங்க ரசிகர் கூட்டம் தயாராக உள்ளது இந்த இதழ்களுக்குள் யார் வித விதமாக பெரிய சைஸ் ரஜினி போஸ்டர்களைச் சிறப்பாகத்தருவது என்பதில் இப்போது போட்டா போட்டி!

—ஸ்டெனிஸ்லாஸ்

---

**❀ தொலைக்காட்சி மகாபாரதத்திற்கு வசனம் எழுதிய ரஹி மசூம் ரஸா (62) ஓர் இஸ்லாமியர்.**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வானொலி விளம்பரங்கள்



வானொலி விளம்பரங்களின் பாதிப்பு பற்றிய அக்கறை அரசுகளுக்கு இருக்கிறதா? எப்படியெல்லாம் விளம்பரங்கள் வெளியாகின்றன என்பதை அய 9-11-89 அன்று புதுவை வானொலியில் ஒலிபரப்பப்பட்ட விளம்பரங்கள் கவனிக்கப்பட்டு, கீழ்கண்ட முடிவுகள் பெறப்பட்டன.

1. வானொலியில் ஒலிபரப்பப்படும் பெரும்பாலான விளம்பரங்கள் திரைப்படப் பாடல்கள் ஒலிக்கும் நேரங்களிலேயே ஒலிபரப்பப்படுகின்றன.

2. இந்த விளம்பரங்களில் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடு பிறமொழிச் சொற்களாகவே காணப்படுகின்றன. (எ-டு) பாண்டிச்சேரி சாரதாஸ்; புதிய ஏர்கண்டிஷன் ஷோரூம்; பட்டு' பருத்தி, பாலியஸ்டர் சேலைகளுக்குச் சிறந்த இடம் 'சாரதாஸ்' நேருவீதி, பாண்டிச்சேரி, ஷர்ட்டிங், சூட்டிங் ஜவுளிகளுக்குச் சிறந்த இடம் 'சாரதாஸ்'

3. அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட சில ஒழுகலாறுகளைச் சில விளம்பரங்கள் மறைமுகமாக வலியுறுத்துவனவாகக் காணப்படுகின்றன. (எ-டு) வரதட்சணை கொடுப்பதும், வாங்குவதும் தடை செய்யப்பட்ட ஒன்று ஆனால் "உங்கள் மகளின் வருங்கால நல்வாழ்விற்கு இன்றே சேமிக்கத் துவங்குங்கள்"

4. விளம்பரங்களுக்கும், அதன் பொருளுக்கும் நேரடியான தொடர்பில்லாமல் ஆடம்பரமான சொற்களின் மூலம் பாமரமக்களை வியப்புக்குள்ளாக்குகின்றன. (எ-டு) ஆறாயிரம் சதுர பரப்பளவைக் கொண்ட ஜவுளி மாளிகை"

5. பொருளின் தரத்தினை ஆராய்ந்து அவர்கள் நல்கும் தகவல்கள் உண்மையானதுதானா என்று ஆராயாமல் தரும் விளம்பரங்களை அப்படியே ஒலிபரப்புவதால் அதில் பொருளைப் பற்றிய மிகையான செய்திகள் இடம் பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டு. எனவே விளம்பரதாரர்கள் தரும் தகவல்களின் உண்மைத் தன்மைகளை அறிய அரசு குழுக்களை அமைத்துச் செயல்பட வேண்டும்.

ஆய்வு : புதுவைப்பல்கலைக் கழக II ஆண்டு 7, முதுகலைத் தமிழ் மாணவர்கள்.

---

❀ கி.பி. 2000இல் இந்தியாவின் மக்கட்தொகை 100 கோடியாகும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கிரிக்கெட் என்னும் போதை

காலனி ஆட்சிக்காரர்கள் தாங்கள் ஆட்சி செய்யச் செல்லும் நாடுகளில் வாழும் மக்களுக்குத் தீய பழக்கங்கள் அனைத்தையும் மெல்ல மெல்ல அறிமுகப்படுத்தி அவர்களை அடிமைகளாக மாற்றிவிடுதல் வழக்கம்.

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு ஐரோப்பிய மது வகைகளுக்கு இந்திய மக்கள் எளிதாகப் பழக்கப் படுத்தப்பட்டனர்; புகையிலைக்குப் பழக்கப்படுத் தப்பட்டனர்; சிகரெட்டுக்குப் பழக்கப்படுத்தப்பட் டனர்; திரைப்படம் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்தப் பட்டனர்; தனிப்பரத்தை விடுதிகள் நடத்துவதற்குப் பழக்கப்படுத்தப்பட்டனர்; போதை மருந்து தின்னப் பழக்கப்படுத்தப்பட்டனர்; இப்பட்டியலில் கிரிக் கெட் விளையாட்டும் ஒன்றாக இடம்பெறுகிறது.

எளிய மக்களை வாட்டிக் கொண்டிருக்கும் ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறைவிடப் போராட்டம் கொள்ளை அடிக்கும் அரசியல்வாதிகளை, அதிகாரிகளை அடையாளம் கண்டு எதிர்க்கும் உரிமை ஆகியவற்றில் இளைஞர் அக்கறை கொள்ளாமல் கிரிக்கெட்டை நோக்கித் திசை திரும்புதல் மூலம் அரசுக்கும், ஆளும் அதிகாரவர்க்கத்திற்கும் நிலையான நன்மைகள் கிட்டுகின்றன.

எந்த அளவிற்குக் கிரிக்கெட் விளையாட்டு, போதையாகி ஒருவனை அல்ல ஓர் இனத்தையே கெடுக்கிறது என்பதற்குச் சரியான சாட்சி 1985ஆம் ஆண்டு ஈழத்தில் இனக் கலவரம் ஏற்பட்டபோது நிகழ்ந்தது ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப் பெற்றனர் இலட்சக்கணக்கானோர் ஈழத்தில் உள்ள தமிழர்கள் தமிழகக் கடற்கரையில் உயிரோடும், உயிரற்றும் ஒதுங்கினர். ஈழம் பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதே சமயத்தில் 1985 ஆகஸ்ட் 21 முதல் செப்டம்பர் 22 வரை கிரிக்கெட் ஆடுவதற்காக ஒரு குழு இந்தியாவில் இருந்து இலங்கை சென்றது. இதனை விடத் தன் இனத் துன்பத்தை அறிய முடியாத அளவிற்கு மக்களை மறக்க அடிக்கச் செய்வதில் கிரிக்கெட் போன்ற விளையாட்டு முன்னிடம் வகிக்கிறது என்பதற்கு வேறு சான்று இருக்க முடியாது.

—க. ப. அறவாணன்

---

❁ பாகிஸ்தான் செல்லும் கிரிக்கெட் வீரர்கள் தங்களுக்குத் தரும் (மிகக் குறைந்த) சம்பளமான ரூ 60,000 போதாதென்றும் இதை ரூ 1,02,000 ஆக உயர்த்த வேண்டுமென்றும் போராடினர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பாம்பைக் கடிக்க விடும் வரதட்சணைக் கொடுமை

சென்ற ஜீலை மாதம் சுதாவிற்கும், டாக்டர் ராஜமயிலிற்கும் ஆடம்பரமாகத் திருமணம் நடந்தது டாக்டர். ராஜமயில் சென்னை அரசு மருததுவ மனையில் மருத்துவராகப் பணியாற்றுகிறார். தமிழ் நாட்டிலிருந்து குஜராத்திலுள்ள சூரத்திற்குச் சென்று பெரிய அளவில் வணிகம் செய்து வரும் சுதாவின் தந்தை தன் ஒரே பெண் சுதாவிற்கு ரூ 8 லட்சம் வரதட்சணை கொடுத்து சிறப்பாக மணம் செய்வித்தார்.

டாக்டர். ராஜமயிலின் தந்தை பழனிச்சாமி ஒரு ஹோமியோபதி டாக்டர். தங்க முட்டையிடும் வாத்தாக சுதாவை நினைத்து, இந்தப் பேராசைக்காரர் பணமும், பொருளும் கேட்டு சுதாவை துன்புறுத்தத் தொடங்கினார் வெறுப்புற்ற நிலையில் உள்ள சுதா, தன் பெற்றோர்களுக்கு இவரின் வற்புறுத்தலைப் பற்றி விளக்கி எழுதி உதவி கோரினாள். பழனிச்சாமிக்கு சுதாவின் தந்தை உடனே கடிதம் எழுதினார் பெரிய தொகையை வரதட்சணையாகக் கொடுத்ததில் திருப்திப்படாமல், தன் சொத்துக்கு ஒரே வாரிசாக உள்ளவள் சுதா என்பது அறிந்தும் இப்படி பேராசை பிடித்து அலைவதைச் சுட்டிக்காட்டியிருந்தார். இக்கடிதத்தைக் கண்டு அடிபட்ட புலியான பழனிச்சாமி, சுதாவையே தீர்த்துக் கட்டி சொத்தை கபளீகரம் செய்யும் நோக்குடன், தன் சொந்த ஊரான தருப்பத்தூருக்குச் சென்று கொடிய நல்லப்பாம்பை ஆறுமுகம் என்ற பாம்பாட்டியைக் கொண்டு வரச் செய்தார். இரு நாட்கள் பாம்பிற்குப் பட்டினி போட்டு, கோப வெறியேற்றினார்.


டிசம்பர் 15 ஆம் தேதி காலை பழனிச்சாமி தன் மகன் வீட்டிற்குச் சென்று மிகவும் கலகலப்பாகப் பழகி, சிற்றுண்டியும் அருந்திவிட்டு, மகன் மருத்துவ மனைக்குக் கிளம்பியவுடன், பாம்பாட்டி, தன் வேலைக்காரி முனியம்மா ஆகியோர் துணையுடன், சுதாவைக் கட்டிப்போட்டு, வாயில் பஞ்சடைத்து, படுக்கையறையில் தள்ளி, கூடையிலிருந்த நாகப்பாம்பை எடுத்து விடச் செய்தார்.

என்ன முயன்றும் நாகம், சுதாவைக்கடிக்க ""ன்வாவில்லை. பாம்பாட்டி"யின் முயற்சியும் வெற்றி பெறவில்லை. இதற்கிடையில் சுதா திமிறி, கதறிய தன் விளைவாக, பக்கத்து வீட்டார், கதவுகளை உடைத்து வந்து சுதாவைக் காப்பாற்றி பழனிச்சாமியைக் கைது செய்ய வைத்தனர்

[தொடர்ச்சி எதிர்ப்பக்கம்]

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டிக் குட்டிக் கவிதைகள்



## லஞ்சம்

வாங்கினேன்
கைது செய்தார்கள்
கொடுத்தேன்
விடுதலை செய்தார்கள்

—தமிழ்தாசன்

## பிரதிபலன்

என் நோயைத்
தீர்த்துக் கொள்ள
டாக்டரிடம் ஓடினேன்
அவரோ—
தன் பணநோயை
என் மூலம்
தீர்த்துக் கொண்டார்

—நடாதூர் வ. திருமகள்

## தாய்க்குலம்

காலையில் வந்த
கீரைக்காரியிடம்
'நாலணு' கீரையைத்
தர்க்கம் புரிந்து
பதினைந்து காசிற்கு
வாங்கிவிட்டு
மாலையில்
புடவைக் கடையில்
சுளையாகக் கொடுக்கும்
ஈரநெஞ்சம்

—நடாதூர் வ. திருமகள்

## சில்லறை

ஆண்
கொடுத்தால்
விபச்சாரம்
பெண்
கொடுத்தால்
சுபமுகூர்த்தம்

—ஜி. வில்சன் அமல்ராஜ்

## குப்பை

தினந்தினமும்
கூட்டினாலும்
பெருக்கினாலும்
வகுத்தாலும்
கழிக்கவே முடியாத
இந்திய சொத்துக்கள்

கு. கருணாநிதி

---

கணவர் டாக்டர் ராஜமயில், தன் தந்தையின் செயலுக்கும் தனக்கும் சம்மந்தமில்லை என்கிறார். நாகத்தைவிடக் கொடியவனான விஷ ஜந்து பழனிச்சாமியை நிதானமாக நீதி மன்றம் விசாரிக்கப் போகிறது! (தகவல்: சண்டே 14-1-90) —இசு

---

❁ மனிதனின் கண்கள் வெளிச்சத்தைவிட இருளில் சுமார் 200 மடங்கு கூர்மையாகிவிடும்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது ஆவாரம்பூ மருத்துவம்

**சரும நாற்றம் நீங்க, பொன்னிறமாக:** ஆவாரம்பூவை உணவில் அடிக்கடி சேர்த்து சமைத்து வந்தால் உடல் பொன்னிறமாக மாறும். சிலர் உடம்பில் உப்புப் பொரித்தாற்போல் இருக்கும். தோலில் வறட்சி இருக்கும். வேர்க்கும்போது கற்றாழை மணம் வீசும். அடிக்கடி நாவறட்சி ஏற்படும் இவற்றையெல்லாம் ஆவாரம்பூ உண்டால் தீர்க்கலாம்.

**மர்ம உறுப்புகளில் எரிச்சல் :** ஆண், பெண் மர்ம உறுப்புகளில் தொல்லையான எரிச்சலா? ஆவாரம்பூவைக் கொண்டு சர்பத் செய்து பருகினால் இந்த எரிச்சல் அடங்கும். வட இந்தியாவில் பெரும்பாடு பிணிகண்ட மகளிர் இதனை யோனிக்குள் செலுத்தி நலம் பெறுகின்றனர்

**உறக்கத்தில் விந்து :** வெளிப்படும் பிரச்சனையை நீக்க ஆவாரம்பூ சர்பத்தைப் பருகி வருக அல்லது சமைத்து உண்க.

**உடல் நமைச்சலுக்கு:** ஆவாரம்பூவுடன் பாசிப் பயறைச் சேர்த்து அரைத்து நமைச்சல் உள்ள பாகத்தில் தேய்த்துக் குளித்தால், நமைச்சல் நீங்கிவிடும்.

**கண்ணோய்க்கு:** ஆவாரம்பூவை வதக்கி படுக்கும் முன் கண்களில் வைத்துக் கட்ட, நோய் நீங்கும்.

**உட்சூடு தணிய :** இதைக் கொண்டு கஷாயம் செய்து அத்துடன் ஆவின் பால் சேர்த்து பருகினால் உட்சூடு தணியும்

**மூல முளைக்கு :** உலர்ந்த ஆவாரம்பூ, அருகம்வேர் இவற்றை இடித்து சூரணம் செய்து, ஆவின் நெய்யில் சிட்டிகையளவு கலந்து சாப்பிட மூலமுளை நீங்கும்.

[ஆதாரம்: "நோய் நீக்கும் பூக்கள்"-கே. எஸ். லட்சுமணன்]

(அடுத்து: நமது குங்குமப்பூ மருத்துவம்) —சித்தன்

---

❁ சிகரெட், புகையிலை போன்றவற்றால் விளைந்த தீமைகளை அகத்திப்பூ நீக்கும்.

---


## சுட்டி இலவசம்

சுட்டியை இன்னும் கேள்விப்படாத நண்பர்கள் உங்களுக்கு இருக்கிறார்களா? அவர்களுக்குச் சுட்டியை அறிமுகப்படுத்தி, சந்தாதாரராக்க முயலலாமே. உங்கள் நண்பர்களின் முகவரிகள் எவ்வளவு ஆயினும் அனுப்புங்கள். உங்கள் சார்பில் அவர்களுக்கு இலவச மாதிரி இதழ் அனுப்புகிறோம். நீங்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டு சந்தாதாரராக்குவீர்களல்லவா?


FREE E - BOOKS , www.thamizham.net.,



# துப்புறவுத் தொழிலாளர்களின் கண்ணீர் கதை

அக்னி ஏவுகணையையும், பிரிதிவி ஏவுகணையையும் விடத்தெரிந்த நம் அரசுக்கு, சாக்கடைக்குள் மனிதனை அனுப்பி சுத்தம் செய்ய வைப்பதற்கு இன்னும் மாற்று தெரியவில்லையா?

தாங்க முடியாத நாற்றத்துடன் நுரைத்து நிற்கும் கன்னங் கரிய சாக்கடை நீருக்குள் மூச்சைப்பிடித்துக் கொண்டு மூழ்கும் இவர்களின் கண்ணீர் வாழ்க்கையை அவர்களிலே சிலரே இப்படி வர்ணிக்கிறார்கள் :-

"இங்கிருக்கிற தொழிலாளிங்க பெரும்பாலும் ஆந்திராவிலிருந்து வந்தவங்கதான். அங்கே எங்களுக்குக் கஷ்டம் அதிகம். வானம் பாத்த பூமி! வேலை இல்லே அங்கே பட்டினியாலே இருக்க முடியாம மெட்ராசுக்கு ஓடிவந்தோம். இங்கே சுளுவா கக்கூஸ் வார்ர வேலைதான் கிடைச்சது."

"குப்பை வாரிக் கொட்டற வேலைகூட பரவாயில்லிங்க. காவாய் சுத்தம் பண்ண உள்ளேயே மூங்கி எந்திரிக்கறவங்களுக்கு இன்னும் மோசமான நிலை சாக்கடையிலே எல்லாவிதக் கழிவுகளும் இருக்கும். உள்ளே இறங்கற வங்க காதுல, மூக்கில, கண்ணுல, வாயில எல்லாம் சாக்கடைத் தண்ணீபோகும். ஆனா வேறவழி இல்லை தம் புடிச்சி சாக்கடைத் தண்ணீலே மூழ்கனும். உள்ளேபோய் மூச்சுப்புடிக்க முடியலேன்னா தப்ப முடியாது"

"எங்கள மாதிரி துப்புரவு தொழிலாளிங்களுக்கு மேலே சி அய் (துப்புரவு ஆய்வாளர்) ஒருத்தன் இருக்கான். ஒரு 5 நிமிஷம் லேட்டாப் போனாக்கா உடனே ஆப்சென்ட் போட்டுடுவானுங்க. பாக்கெட்ல எவ்ளோ வச்சிருக்க' என்று அவன் கேட்பான் இருபதோ முப்பதோ குடுத்தா தான் ஆப்சென்ட் போடாம அன்னிக்கு வேலை செய்ய விடுவான். உடம்பு சரியில்லே லீவு போடனும்னாக் கூட 30ரூபாய் தராம லீவு கிடையாது இதெல்லாம் போக மாசாமாசம் சம்பளம் வாங்கும்போது 50 ரூபாய் சி. அய்க்குக் கொடுக்கனும் இந்த அதிகாரிங்க எல்லாம் எங்களை அடிச்சுப் புடுங்கி சாப்பிடதுக்குன்னே இருக்காங்க. எங்களுக்கு 23 சங்கம் இருக்கு ஆனா ஒன்னும் பிரயோஜனமில்லை. அங்கேயும் லஞ்சம் தான் விளையாடுது."

—பேட்டி: கேடயம்

---

● இஸ்லாமிய நாடுகளில் இப்பொழுதும் பெண்களுக்குப் பத்திரிகை நடத்தும் உரிமை இல்லை.

FREE E - BOOKS www.thamizhagam.net

# பாம்பாட்டிகளின் எதிர் காலம்

ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வாழ்வளித்து வந்த பாம்பாட்டித் தொழில் தற்போது முற்றிலும் அழிந்துவிடும். நிலையில் இருக்கிறது.

உயிர்வாழ வேண்டி பாம்பாட்டிகள் தம் தொழிலை விட்டு பிற தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். பரிதாபாத்தில் வாழும் பாம்பாட்டிகளில் ஒருவரான ஷியாம் லால் கூறுகிறார். ''மிகவும் கடினமானதும் அபூர்வமானதுமான இந்தப் பாம்பாட்டித் தொழில் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று ஆனால் நாங்கள் பிச்சைக்காரர்கள் போல நடத்தப்படுகிறோம். நாங்கள் காட்டும் வித்தைகளைக் காணக் கூட்டம் திரண்டாலும் வித்தையை மதித்து காசு கொடுப்பவர்கள் மிகச் சிலரே தெருவோரங்களிலும் சுற்றுலாத் தலங்களிலுமே நடைபெறுவதால் இது ஒரு மலிவான வியாபாரமாகவே மதிக்கப்படுகிறது. அத்துடன் எங்களை சமூக விரோதிகளாகக் கருதும் போலீசாரின் அராஜகத்தையும் தாங்க வேண்டியுள்ளது. ஒரு காட்சிக்கு வசூலாகும் தொகை ரூ 10 மட்டுமே நிறைய காட்சிகள் நடத்தி தொகையும் வசூலானால் மாதம் ரூ 200 கிடைக்கும் இதில் முட்டை, பால், இறைச்சி என்று சாப்பிடும் பாம்புகளைப் பராமரிப்பதே பெரும் செலவாகி விடுவதால் எங்கள் குழந்தைகள் பெரும்பாலும் அரைப்பட்டினியாகவே வாழ வேண்டியுள்ளது''

வீடியோ விளையாட்டுகள், கார்டூன் படங்கள் சித்திரக்கதைகள், ரூபிக்ஸ் கனசதுரங்கள் இவற்றின் வரவால் குழந்தைகள் பாம்பாட்டிகளின் வித்தைகளை நாடுவதில்லை 3 ஆண்டு காலம் பாம்பாட்டியாக இருந்தபின் எல்லைப் பாதுகாப்புப் படையில் சேர்ந்துள்ள நாராயணன் கூறுகிறார்'' தொலைக் காட்சியும், திரைப் படங்களும் தான் எங்கள் தொழிலை மிகவும் பாதித்துள்ளன. எங்கள் வித்தை முழுவதையும் அவர்கள் கவர்ச்சிகரமாகக் காட்டி விடுகின்றனர். பாம்பு- கீரி சண்டையைக் கூட க்ளோஸ் அப்பில் பின்னணி இசையுடன் முழுவதும் காட்டி விடுகின்றனர் இவர்களுடன் எங்களால் போட்டியிட முடியாது.''

வெளிநாட்டவர்கள் நினைப்பது போல இந்தியா இன்னும் பாம்பாட்டிகளின் தேசமல்ல இந்த உண்மையை ஏற்றுக் கொண்டு பாம்பாட்டிகளின் வாழ்க்கை மாறுவதும் மாற்றப்படுவதும் வரவேற்கப் பட வேண்டியதே.

—நிலா

ஆசிரியர்: மு. ஷேக் வெளியிடுபர்: இ. இராமச்சந்திரன், அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, நடேசன் தெரு, சென்னை-600 005 முகவரி: 1494, அண்ணா நகர், சென்னை-6000 40

FREE E - BOOKS , www.thamizham.net.,

# காசு விழுங்கி எந்திரம் மோசம் செய்தால்

நண்பர்களுடன் கோவை ரயில் நிலையத்திற்குச் சென்ற ஒருவர் தமது எடையைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அங்கிருந்த எடைகாட்டும் எந்திரத்திடம் சென்றார். வழக்கம் போல சிவப்பு, மஞ்சள் நிற விளக்குகள் எரிந்தன எந்திரத்தில் ஏறி நின்றார். சிவப்பு, வெள்ளை நிறக் கோடுகளைத் தாங்கிய சக்கரம் உடனே சுழல ஆரம்பித்தது. அது நின்றவுடன் 25 பைசா நாணயத்தைத் துவாரத்தின் உள்ளே தள்ளிவிட்டு எடை காட்டும் அட்டைக்காக காத்திருந்தார். அட்டை வரவில்லை மீண்டும் ஒரு 25 பைசா நாணயத்தைத் தள்ளினார். காசுகள் விழுங்கப்பட்டது தான் மிச்சம் அட்டை வரவேயில்லை.

ரயில் நிலைய அதிகாரி, அவரது உதவி அதிகாரி இருவருமே விடுப்பில் சென்றிருந்ததால் இது குறித்து தலைமை டிக்கெட் பரிசோதகரிடம் புகார் செய்தார். ''எடை காட்டும், எந்திரங்களெல்லாம் என் பொறுப்பைச் சார்ந்தவை அல்ல'' என்று அவர் நழுவி விட்டார்.

நண்பர்களுடன் சேர்ந்து எந்திரத்தில் என்ன கோளாறு என்பதை ஆராய முற்படுகையில் முன்பு நழுவிச் சென்ற அதே தலைமை டிக்கெட் பரிசோதகர் விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தார் நண்பர்கள் குழுவைச் சரமாரியாகத் திட்டியதுடன் போலீசில் ஒப்படைத்து விடுவதாகவும் அச்சுறுத்தினார். ஆனால் நண்பர்கள் குழு அஞ்சாமல், ''எடை காட்டும் எந்திரங்கள் உங்களது பொறுப்பைச் சார்ந்தவை அல்ல என்று நீங்கள்தானே கூறினீர்கள்?'' என்று திருப்பிக் கேட்டனர். அவர்களது கேள்விக் கணையால் அடிபட்ட அவர் முகம் வெளிறி வந்த வழியே திரும்பி விட்டார்.

நண்பர்கள் குழு அந்த எந்திரத்தின் மீது, ''இந்த எந்திரம் பழுதடைந்துள்ளது தயவு செய்து உங்கள் காசை வீணாக்காதீர்கள்'' என்று ஒருதாளில்எழுதிஒட்டிவிட்டுத்தான் ரயில் நிலையத்தைவிட்டுச்சென்றது.

இருநாட்களுக்குப் பின் நண்பர்கள் குழு மீண்டும் வந்து எந்திரத்தைப் பார்வையிட்டது. எந்திரம் பழுது பார்க்கப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தது.

—நிலா

---

**● கோழி விலைரூ 70 முதல் ரூ80 வரை விற்கப்படும் மேற்கு ஒரிசாவில் பெண் குழந்தை ரூ 40 க்கு விற்கப்படுகிறது.**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# அமெரிக்காவில் கம்யூனிசம்

பொதுவுடைமை நாடுகள் பலவும் முதலாளித்துவத்திற்குத் திரும்புவதாக ஏருசரார் விமர்சிக்கும் இந்நேரத்தில் –

அமெரிக்காவில் என்றுமில்லாத அளவுக்கு பொதுவுடைமை இயக்கம் வளர்ந்துள்ளது.

1919இல் அமெரிக்காவில் கம்யூனிஸ்டு கட்சித் தொடங்கப்பட்டது. முதலாளித்துவத்தின் சொர்க்கமான அமெரிக்காவில், கடுமையான சோதனைகளையும், அடக்கு முறைகளையும், அரசியலாரின் வெறித் தாக்குதல்களையும் கட்சி சந்தித்துக்கொண்டே வளர்ச்சி நிலைக்கு வந்துவிட்டது.

1930-களில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு எதிராக பெரிய அளவில் போராட்டத்தை நடத்தியது. சமூகப் பாதுகாப்புச் சலுகை வேலை இல்லாதவர்களுக்கும் விரிவுபடுத்தப் போராடியது.

(1989இல் 70வது ஆண்டு விழாவை கம்யூனிஸ்டு கட்சி கொண்டாடியது. ஓராண்டுகாலம் விழா தொடர்கிறது. இதனால் அமெரிக்கர்கள் பொதுவுடைமையின்பால் ஈர்க்கப்பட்டனர். ஓரே ஆண்டில் கட்சியில் மேலும் 2000 பேர் இணைந்தனர். தற்போது 24,000 உறுப்பினர்களும்பெரிய அளவில் ஆதரவாளர்களும் பெருகி வருகின்றனர்.)

கட்சித்தலைவர் ஜேம்ஸ்வெஸ்டு கூறுகிறார்: "சென்ற 20 ஆண்டுகளில், கட்சி நிலைநிற்பதே ஒரு பிரச்சனையாக இருந்தது. ஆனால் வரும் பத்தாண்டுகளில் கம்யூனிஸ்டு இயக்கத்தின் எழுச்சி மிகு வளர்ச்சியாக இருக்கும்"

தற்போது உலகில் ஏற்படும் உலகச் சூழ்நிலைகளின் மாற்றம் பெரிஸ்த்ரோய்கா, கிளாஸ்நாஸ்டு ஆகியவை எழுப்பிய புது எதிர்பார்ப்புகள் அமெரிக்க மக்களை பொதுவுடைமை இயக்கத்தின் பக்கம் இழுக்கின்றன 1990 அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சியின் வளர்ச்சியின் கட்டமாக இருக்கும்.

ஆயுத உற்பத்தியைக் கொண்டு உருவாக்கப்பட்ட அமெரிக்கப் பொருளாதாரம் சிக்கல்களையும், முரண்பாடுகளையும் சந்திக்கின்றது. பழைய தொழிற்சாலைகள் பூட்டப்படுகின்றன. வேலையற்றோர் எண்ணிக்கை வளர்கிறது. இவற்றிற்கு எதிராக பொது மக்களையும், தொழிலாளர்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு கட்சி வளர்ச்சி அடையப்போவது, உறுதி!

அமெரிக்காவில் புதிய பொதுவுடைமையை 21 ஆம் நூற்றாண்டு சந்திக்கும்!


(செய்தி: ஏழையின் குமுறல்) —உலகப்பன்

---

❀ இந்தியாவின் கடன் சுமை ரூ. 1,00,000 கோடி. எங்கே திரும்பித்தருவது? எல்லாம் காந்திக் கணக்குதாம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தோடர்கள் கிரேக்கர்களா?



தமிழகத்தின் நீலகிரி மலைகளில் வாழும் தோடர்களின் பூர்வீகம் மானிடவியல் அறிஞர்களுக்கு ஒரு புதிராகவே உள்ளது.

தோடர்கள் வழக்கமாக உடுத்தும் வெள்ளை நிற மேலங்கி, நீண்ட தாடி, மேலும் சில பழக்க வழக்கங்கள் இவற்றை வைத்து அவர்கள் பைபிளில் வரும் இஸ்ரேல் மக்களின் 12 குலங்களில் ஒரு குலத்தவராக இருக்கலாம் என்பது சமீபத்திய கண்டுபிடிப்பு

கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாண்டுகளுக்கு முன் இந்தியா மீது படையெடுத்து வந்த மாவீரன் அலெக்சாண்டர் உடன்வந்த மாசிடோனியர்களிடமிருந்து தான் 4 வித தோடர் இனங்களும் தோன்றியிருக்க வேண்டும் என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். தோடர் பெண்கள் உடுத்தும் பூத்தையல் அங்கியும், அவர்கள் தலைமுடியை அலங்கரிக்கும் விதமும் கிரேக்கர் முறையை ஒத்திருப்பதாகக் கூறப்படுகின்றது

தோடர்களின் வரலாறு எழுதப்படவில்லை. படிப்பறிவில்லாத அவர்களால் தமது முன்னோர்களைப் பற்றிச் சொல்லவும் தெரியவில்லை. அவர்களது மொழிக்கு வரிவடிவம் இல்லை. அவர்கள் பேசும் மொழிக்கும் ஏனைய இந்திய மொழிகளுக்கும் மிக மிகக் குறைந்தஒற்றுமையையே காணப்படுகிறது.

இன்று சுமார் 2500 பேர்கள் மட்டுமே கொண்ட தோடர் இனம் எருமை மாடுகளையே வாழ்வின் மையமாகக் கொண்டு இயங்குகிறது எருமையின் வாலைப் பிடித்துக் கொண்டுதான் பூமியின் மேற்பரப்பைத் துளைத்துக் கொண்டு உலகில் தாம் பிறந்ததாகத் தோடர்கள் கருதுகின்றனர். அதனால் எருமைகளே அவர்களது தெய்வம். அவையே அவர்களுக்கு உணவும் தருகின்றன.

இன்று தோடர்களுக்கு இலவசக் கல்வி, உணவு, புத்தகங்கள், உடை ஆகியவை அளிக்கப்படுகின்றன. தோடர் இனப் பெண்கள் அவ்வினத்தின் பொருளாதார சக்தியாக மாறிவருகின்றனர். ஊட்டியிலிருந்து வரும் துணிகளில் பூத்தையல் வேலை செய்து அனுப்புகின்றனர். மானுடவியல் ஆய்வாளர்களுக்குப் புதையல் போன்ற இவ்வினத்தைப் மேலும் ஆய்வது மனித வரலாற்றின் பல புதிர்களுக்கு விடைகாண உதவும்.

—நிலா

---

ஃ இந்தியத் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து 1912 இல் தான் டில்லிக்கு மாறியது

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ரசாயன ஆயுதங்கள் என்ன செய்யும்?

| ஆயுத வகைகள் | விளைவுகள் |
|---|---|
| *இரத்தத்தை தாக்குபவை*<br>ஹைட்ரஜன் சயனைடு<br>சைனோஜன் குளோரைடு | சுவாசித்தல், இரத்தத்திற்கு ஆக்ஸிஜன் எடுத்துச் செல்லும் திறன் பாதிக்கப்படும், மூச்சுத் திணறல் ஏற்படும், மரணம் உண்டாகலாம். |
| *மூச்சை அடைப்பவை*<br>குளோரின்<br>பாஸ்ஜீன்<br>குளோரோபிக்ரின் | இந்த வாயுக்களில் சில வைக்கோல் போன்ற நெடியைப் பெற்றவை. சுவாசித்தால் சுவாச உறுப்புகளின் உட்புறப் படலங்கள் கழன்றுவிடும். இரத்தத்தில் உள்ள பிளாஸ்மா பிரிந்து நுரையீரலில் பிரவேசித்து காற்றறைகளை அடைத்துவிடும். சுவாசிக்க முடியாமல்மரணம் ஏற்படும். |
| *கொப்புளங்கள் உண்டாக்குபவை*<br>கந்தக மஸ்டர்ட்<br>நைட்ரஜன் மஸ்டர்ட்<br>லெவிஸைட் | இந்த வாயுக்களால் உண்டாகும் விளைவுகள் பல வாரம் நீடிக்கலாம். வாந்தி, வயிற்றுக் குமட்டல் உண்டாகும். கண்களிலும் தோலிலும் எரிச்சல் ஏற்படும். பார்வை தற்காலிகமாகப் பாதிக்கப்படும். சுவாச உறுப்புகளில் ஏற்படும். கோளாறுகளால் மரணம் ஏற்படலாம். |
| *நரம்புகளைத் தாக்குபவை*<br>டாபுன்<br>சாரின்<br>சோமான்<br>வி. எக்ஸ் | இவை மணம் நிறம் அற்றவை, நரம்பு மண்டலத்தை தாக்குபவை. சுவாசித்தால் அல்லது தோலில் பட்டால் போதும். 15 நிமிசங்களில் மரணம் ஏற்படும். ரசாயன ஆயுதங்களிலேயே மிகவும் கொடியவை. |

ஆதாரம் : — தினமணிச் சுடர், 13—1—90

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆசியா:

# சௌதி அரேபியா

இன்றைய சௌதி அரேபியாவை உருவாக்கி 1932 இல் புதுப் பெயரைப் பிரகடனப்படுத்தியவர் மன்னர் இபுன் சௌது. இவருடைய 4வது மகன் அப்துல் அஜீஸ் தற்போதைய மன்னர். மன்னரே பிரதமர். தேர்தலோ அரசியல் கட்சிகளோ இல்லை. தூய முடியாட்சி

5000அரசிளங்குமரர்கள், ராஜ குடும்பத்தில் உண்டு. இவர்களும் அரசு அதிகாரிகளும் நாட்டின் 10%எண்ணெய் வருவாயை அனுபவிக்கின்றனர் உலகில் மிகுந்த எண்ணெய் கிடைக்கும் இத்தேசத்தின் பூமியில், உலகின் 1/4பங்கு எண்ணெய் சேமிப்பாக எடுக்கப்படாமல் உள்ளது.

இதன் 21, 50, 000 ச. கி. மீட்டர் பரப்பில் (இந்தியா : 32 87 263 ] வெறும் 1 1/4 கோடி மக்களே வாழ்கின்றனர் நாட்டைத் தொழில் மயமாக்க 25 லட்சம் வெளிநாட்டினர் ஏற்கப்பட்டுள்ளனர்.

உலகின் மிக வெப்பமான பாலைவனங்கள் (113oF) இங்குள்ளன ஒரு விழுக்காடு நிலமே சாகுபடிக்கு ஏற்றது. குடி நீர் விலையில் பாதி பெட்ரோல் விலை ஆர்க்டிக் பனிக்கட்டிகளை அரேபியாவிற்கு நகர்த்திவந்து தூய நீரை பெறும் திட்டம் உண்டு. ஒரு நாளைக்கு 3 பள்ளிகள் வீதம் தொடங்கப்பட்டு கல்வித் தீ பரவியும் இன்னும் 60% மக்கள் எழுத்தறி வற்றவர்கள். நாட்டு மக்களுக்கு இலவச இடமும் வீடு கட்டிக்கொள்ள வட்டியில்லா கடனும் அரசு வழங்குகிறது. கார்கள் குளிர்சாதன பெட்டிகள் போன்றவை பழுது பட்டால் மக்கள் தூக்கியெறிந்து புதிதாக வாங்குவர். மின் விளக்குகளை யாரும் அணைப்பதேயில்லை.

இசுலாத்தின் காவலர்களாக சௌதியர் தம்மை நினைக்கின்றனர் கொலை, கற்பழிப்பு, விபச்சாரம், இசுலாத்தைக் கைவிடல் ஆகிய குற்றங்களுக்குத் தலை சீவப்படும் எனினும் குற்றங்கள் நின்றுவிடவில்லை தீவிர ஆண் ஆதிக்கசமூகம். பெண்கள் கணவர்அல்லது தந்தையுடன் மட்டுமே வெளியே நடக்க முடியும் பெண்கள் கார்ஓட்டக் கூடாது. பெண்களுக்கான நிறுவனத்தில் மட்டுமே பணியாற்ற முடியும். பல்கலைக்கழகத்தில் படிக்கும் பெண்கள், ஆண் விரிவுரையாளர்களின் வகுப்பை, தொலைக்காட்சி வழி தான் கவனிக்க முடியும். மிருகக் காட்சி சாலைக்கு செல்ல ஆண்களுக்குத் திங்கள் - பெண்களுக்கு செவ்வாய் / வியாழன் குடும்பத்துடன் சேர்ந்து செல்ல முடியாது

தலைநகர் ரியாத் ஒரு பாலைவனச் சோலைசெங்கடல் மேல் கட்டப்பட்ட துறைமுக நகரம் ஜெட்டா வணிகத்தலைநகர். நகரத்தில் கூட திரைப்படக் கொட்டகை நடத்தவோ, சமுகக்கேளிக்கைகளுக்கோ அனுமதியில்லை. பெரியநகரங்களில் மட்டுமே பூங்காக்கள் வீடியோவில் படம் பார்ப்பதும் நண்பர்கள் இல்லங்களுக்குச் செல்வதுமேபொழுதுபோக்கு புனித நகரங்களான மெக்கா,மதீனா விற்கு வரும் பயணிகளால் வரும் வருவாய் எண்ணெய் வருவாயைவிட மிகுதி.

[அடுத்து : ஐக்கிய அரபு நாடுகள் U A.E]

— உலகப்பன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இந்துக்கள் சாதுவான ஜந்துக்கள்

தந்திரபுத்தியுள்ள பிராமணரால் தீண்டாமை, பெண்ணடிமைத்தளம் போன்ற தீமைகள் இந்துமதத்தில் புகுத்தப்பட்டன. இன்னும் எத்தனையோ மதங்கள் தோன்றும். ஆனால், அவை கடவுளை யடையும் வெவ்வேறு வழிகளைக் கூறுபவை. இவற்றில உயர்வு தாழ்வு கற்பித்து மனிதர்கள் தங்களுள் சண்டையிடலாகாது, என்று இந்துக்களின் ரிக் வேதத்தில் கூறப்பட்டுள்ளதாம். இஸ்லாம் மத நிறுவனர், அவரது வாகனம், தோற்றம் ஆகியவை பற்றிக் கூட முன் கூட்டி அறிவிக்கும் சுலோகம் இந்து மத நூலில் உள்ளதை முரசொலி அடியார் சுட்டியுள்ளார்.

இந்துக்களின் சகிப்புத் தன்மையால்தான் இந்தியாவில் பிற மதங்கள் செழித்துள்ளன இந்துக்களின் தீண்டாமை இம்மதமாற்றங்களுக்கு அடிகோலியது உண்மையானாலும், வலுக்கட்டாய மத மாற்றங்களுக்குத் தீண்டாமை காரணமாக இருந்திருக்க முடியாது. மிகத்தொன்மையான இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டதையும் அவற்றின் அருகே பிற மத ஆலயங்கள் கட்டப்பட்டதையும் இந்துக்கள் சகித்துக்கொண்டவர்கள். ஆனால், இன்றோ சில மத வெறியர்கள் இச் சகிப்புத்தன்மையை இந்துக்களிடமிருந்து விரட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளனர். திரௌபதியின் கோபத்தில் நியாயம் இருப்பினும், தனிமனிதக் கோபங்களின் அடிப்படையில் போரைத் துவக்கி அப்பாவிகளை மடியச்செய்தல் தகாது என்று தொலைக்காட்சி மகாபாரதத்தில் கண்ணன் சொல்லுகிறார். இந்த ஒரு கோட்பாடே இந்து மதத்தின் மேன்மையை எடுத்துக்காட்ட வல்லது என்பதை மகா பாரதம் இந்து மகா காவியம் என்று பீற்றிவரும் இந்து மத வெறியர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

விட்டுக் கொடுத்தலே விவேகமாகும் மதவெறியர் தம் வலையில் விழுந்து இரத்தம் சிந்தவைத்தல் கொடூரமானது. காலங்காலமாய்ச் சகிப்புத் தன்மை காட்டிவந்துள்ள இந்துக்கள் மத வெறியர்களால் தங்கள் சிறப்பியல்பை இழத்தல் ஆகாது. எனவே, ராம ஜன்ம பூமியை ஒட்டி அமைக்கப்பட்ட மசூதியைத் துளியும் சேதப்படுத்தாது, அதிலிருந்து ஒதுக்கமாக ராமர் கோவிலை இந்துக்கள் கட்ட வேண்டும். ராமும் ரஹீமும் ஒன்றே என்பதை ஒப்புக்கொள்ளாதவன் உண்மையான இந்து அல்லன்.

—ஜோதிர்லதா கிரிஜா

---

**❁ 1832 இல் எழுதப்பட்டு, 1863 இல் அச்சாகி வெளியான ரியாஸ்- இ- தில்போ என்ற உருது மொழி நாவல்தான், இந்திய மொழியில் எழுதப்பட்ட முதல் நாவல்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ரஷ்யாவின் எதிர்காலம்

குழப்பத்திலும், சீர்குலைவிலும் சிக்கியுள்ள சோவியத் ஒன்றியம் இனி என்ன ஆகப் போகிறது? சோஷலிச சிந்தனைகளுக்கும், சோதனைகளுக்கும், மறுமலர்ச்சிகளுக்கும் இடமளிக்கும் ஜனநாயகத் தொட்டில் ஆகுமா? அல்லது இட்லரின் நாஜி சர்வாதிகாரத்துக்கு ஆளாகுமா? என்பது தெரியவில்லை.

ஸ்டாலின் - பிரஸ்நேவ் சர்வாதிகாரத்தின் 50 ஆண்டுகால ஆட்சிக்குப் பின்னரும் சோவியத் மக்களிடம் மார்க்சியப் பண்பாடும், கோட்பாடும், சமூக சீர்திருத்தமும் வேரூன்றவில்லை. 15 குடியரசுகளிடம் ஒற்றுமை உணர்வை வளர்க்க முடியவில்லை. மாறாக சபலங்களும், மூட நம்பிக்கைகளும், ஒழுக்க மீறல்களும் வளர்ந்துள்ளன. தேவாலயங்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது.

இன்னும் சில ஆண்டுகளில் சோவியத்தில் தீவிர வலச்சாரி மற்றும் ஸ்டாலினிய கூட்டு நாஜி சர்வாதிகார ஆட்சியோ அல்லது ஜனநாயக சோஷலிச ஆட்சியோ ஏற்படலாம்.

சர்வாதிகார ஆட்சிக்கு ரஷ்ய ரகசிய போலிஸ் நிறுவனமான கே. ஜி. பியும், மூத்த ஸ்டாலினிஸ்டு தலைவர்களும், நாஜி பாணி ரஷ்ய தேசிய அமைப்புகளும் ராணுவத்தின் ஒரு பிரிவும் தலைமை வகிக்கும்.

ஜனநாயக சோஷலிச ஆட்சிக்கு ஸ்டாலினிஸ்டு அதிருப்தியாளர்களும் சர்வாதிகார எதிர்ப்பாளர்களும், ராணுவத்தின் ஒரு பிரிவும் தலைமை வகிப்பார்கள்.


சர்வாதிகாரம் ஆட்சியை முதலில் பிடித்தால் மக்கள் எழுச்சியைச் சமாளிக்க முடியாது. ருமேனிய சர்வாதிகாரி செசஸ்கு பாணியில் தலை இடிந்து கவிழும். ஜனநாயக சோஷலிஸ்டுகள் ஆட்சியைப் பிடித்தால் மக்களின் பிரச்சனைகளை சமாளிக்க சிலியின் ஆலண்டோ பாணியிலோ அல்லது இந்தியாவில் ஜனதா கட்சி பாணியிலோ ஆட்சியை இழக்கும்.

அதை அடுத்து ஏற்படும் சோவியத் அரசாங்கமே பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கு நிலைக்கும்.

அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மனித குலத்தின் உள்ளதமான லட்சியமான லட்சியம் என்பது வெறுமை அடைந்து விடும். அதற்கான ஒளவு மாற்று இந்தியாவில் தோன்றக்கூடும். — இரா

❀ உலகம் அனைத்தையும் மயக்கும் ஆற்றல் படைத்த ராகம்—ஜகன் மோகினி

FREE E - BOOKS , www.thamizham.net.,



# மருத்துவரிடம் நட்ட ஈடு!

பல்வேறு வகைகளில் நுகர்வோர் ஏமாற்றப்பட்டு வரும் இக்காலத்தில் திருச்சி. நுகர்வோர் பாதுகாப்புக் கழகம் பலரும் பாராட்டத்தக்கச் செயலைச் செய்து வழிகாட்டியுள்ளது.

திருச்சியிலுள்ள மருத்துவர் ஒருவரிடம் சிகிச்சைக்காக ஒரு குழந்தையைப் பக்கத்து கிராமத்திலிருந்து அதன் பெற்றோர் அழைத்து வந்தனர். மருத்துவர் குழந்தைக்கு ஊசி போடும் போது ஊசி உடைந்து ஒரு பகுதி குழந்தையின் உடலினுள் பதிந்து விட்டது கலக்கமுற்ற பெற்றோர்கள் உடனே ஊசியை எப்படியாவது எடுத்துவிடும்படி மருத்துவரை வேண்டினர். மருத்துவரோ. சிறிதும் கலக்கமோ, வருத்தமோ அடையாமல் குழந்தையை அரசு பொது மருத்துவ மனைக்கு அனுப்பி விட்டார் அங்கிருந்த அறுவை சிக்ச்சை மருத்துவரோ அரசுமருத்துவ மனையில் போதியவசதிகள் இல்லை என்று கூறி தனியார் மருத்துவ மனை ஒன்றில் குழந்தைக்கு அறுவைச்சிகிச்சை செய்து ஊசியை எடுத்து விட்டார். இதனால் குழந்தையின் பெற்றோர் ரூ 2 000 மருத்துவர் கட்டணம் கட்டவேண்டியதாயிற்று முற்றிலும் மருத்துவர்களது கவனமின்மையே அறுவை சிகிச்சைக்குக் காரணமாக இருந்த போதும் அநியாயமாகக் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

இதனால் கோபமுற்ற பெற்றோர்கள் திருச்சி நுகர்வோர் பாதுகாப்புக் கழகத்தின் உதவியை நாடினர். சம்பந்தப்பட்ட விவரங்கள் அனைத்தையும் சேகரித்த இக்கழகம் அப்பெற்றோர்களுக்குத் தேவையற்ற உடல், மனவேதனையையும், அதிகப்படியான செலவையும் ஏற்படுத்தியதற்காக அம்மருத்துவர் ரூ 20, 000 ஈட்டுத் தொகை அளிக்க வேண்டுமென வற்புறுத்தியது. கழகத்தின் நியாயமான ஆனால் [illegible] வற்புறுத்தலுக்குப் பணிந்த அம்மருத்துவர் தன்குற்றத்திற்கு வருந்தியபடன் ஈட்டுத்தொகையையும் கொடுத்து விட்டார்.

—ரேவதி

அனைத்து அஞ்சல் தொடர்புகளுக்கும் :
**''சுட்டி''**
அஞ்சற்பெட்டி எண் : 6888, சென்னை-600 040
**ஆண்டுச் சந்தா: ரூ 12/-**
எந்த மாதமும் சந்தாதாரராகலாம்
**ஆயுள் சந்தா. ரூ 200/-**

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL) தமிழ்நூல்கள்

FREE E - BOOKS , www.thamizham.net.,